## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

## தொடர் கேள்விக் கணைகளால் திணறும் ஒன்றிய அரசு!

**இரயில்வேதுறையை கைகழுவும் ஒன்றிய அரசு?**

**கனிமொழி கருணாநிதி:**



வழக்கம்போல ஒன்றிய அரசு அனைத்து அதிகாரங்களையும் தனது கையில் எடுத்துக் கொண்டு, நாடாளுமன்றத்தில் மற்றவர்கள் என்ன செய்யவேண்டும் என கட்டளையிடுவதைபோலவே இரயில்வே திருத்த மசோதா 2024 விசயத்திலும் நடந்துகொள்கிறது.

நாட்டிலுள்ள மற்ற அனைத்து இரயில்வேகளைவிட தெற்கு இரயில்வே மண்டலத்திற்கு உட்பட்ட இரயில்களின் தரம் மிக மோசமானதாக இருக்கின்றது. உணவு மற்றும் கழிப்பறை வசதிகளின் தரம்கூட மிக மோசமானதாக இருக்கின்றன. இதை சுட்டிக்காட்டும்போது ஒன்றிய அரசு இரயில்வேதுறை தனியார்மயமாக்கலை முன்மொழிகிறது.

இப்படி இரயில்வேதுறையை ஒன்றிய அரசு கைகழுவுவது சரியல்ல. நாட்டின் பெரும்பான்மையான அடித்தட்டு மக்கள் இன்றும் தங்களின் முதன்மை போக்குவரத்தாக இரயில்களையே நம்பி இருக்கின்றனர். அதை கருத்தில்கொண்டு இரயில்வேதுறை தனியார்மயமாக்கும் எண்ணத்தை ஒன்றிய அரசு முற்றிலுமாக கைவிட வேண்டும்.

மேலும் எனது தொகுதியான தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதி என்பது வணிகர்கள் அதிகமுள்ள நகரம். ஆனால் சென்னைதூத்துக்குடி வழித்தடத்தில் நாளொன்றுக்கு ஒரு இரயில் மட்டுமே இயக்கப்படுகிறது. இரயில்வே அமைச்சகம் கூடுதல் இரயில்களை இவ்வழித்தடத்தில் இயக்கவேண்டும் உடனடியாக முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும், சென்னைதூத்துக்குடி வழித்தடத்தில் வந்தேபாரத் இரயில் ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

**மோடி அரசின் புதுத்திட்டங்கள் காலி பாத்திரங்கள் சத்தமிடுவதைபோல் வெற்று முழக்கங்கள்தான்**

**கனிமொழி என்.வி.என்.சோமு:**



20 ரூ தண்ணீர் பாட்டில் 100 ரூபாய்.

50 ரூ. இட்லி 300 ரூபாய்.

தற்போது இந்தியாவில் சொந்த நாட்டு விமானங்களில் செல்லக்கூடியவர்கள் இருவர் மட்டுமே!

விமானப் போக்குவரத்தை தனியாருக்கு தாரைவார்த்த ஒன்றிய அரசை கண்டித்தும் புது விமான போக்குவரத்து மசோதா 2024 பற்றியும் மக்களவையில் திமுக எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசியதாவது :

சட்டங்களுக்கு இந்தி மற்றும் சமஸ்கிருத்தில் பெயர் வைப்பதை ஒன்றிய அரசு தவிர்க்கவேண்டும். தொடர்ந்து மசோதாக்களை இந்தியில் முன்மொழிவது மூலம் இந்தி பேசாத மக்கள்மீது ஒன்றிய் அரசு இந்தியை திணிப்பது முறையல்ல.

இந்திய அரசு விமானங்கள் தயாரிப்பதில்லை, அரசுக்கு சொந்தமாக விமான நிலையங்கள் இல்லை. ஆனால் விமான தயாரிப்பு தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல் குறித்து இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது வேடிக்கையாக இருக்கின்றது. இந்தியாவில் மேக் இன் இந்தியா எனும் முழக்கம் வெறும் முழக்கமாக மட்டுமே இருக்கிறது. அதேபோல் ஸ்டேண்ட்அப் இந்தியா முழக்கம் ஸ்டேண்ட்அப் காமெடியாகிவிட்டது.

காலி பாத்திரங்கள் சற்று அதிகமாக சத்தமிடுவதைபோல கடந்த பத்தாண்டுகளில் மோடியின் பாஜக அரசு உருவாக்கியுள்ள எண்ணற்ற முழக்கங்கள் வெற்று முழக்கங்களாக மட்டுமே உள்ளன.

இந்த மசோதா விமானங்கள் தயாரிக்கும்முறைக்கு சட்டங்கள் இயற்றவும், விமான பாதுகாப்பை உறுதிசெய்யவும், விமான விபத்துகளை ஆய்வு செய்யவும் ஒன்றிய அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் இயற்றப்பட்டுள்ளது. உண்மை என்னவென்றால் விமானத் தயாரிப்பு, போக்குவரத்து, விமான நிலையங்கள் தொடர்பான அத்தனை நிறுவனங்களும் (ராஜிவ்காந்தி தேசிய விமானப் பல்கலைகழகம் உட்பட) ஏற்கனவே போதுமான சட்டத்திட்டங்கள் இயற்றப்பட்டு அதன்படி இயங்கி வருகின்றன. விமான போக்குவரத்து மசோதா 2024 என்கிற பெயரில் ஒன்றிய அரசு அரைத்த மாவையே மீண்டும் அரைத்திருக்கிறது.

விமான போக்குவரத்தை முற்றிலும் தனியார் மயமாக்கியதன் விளைவாக விமான போக்குவரத்துதுறை அமைச்சகம் தனது அதிகாரத்தை இழந்திருக்கிறது. வருங்காலத்தில் நாட்டில் பேரிடர் காலங்களில் மக்களை காப்பாற்ற விமான போக்குவரத்து தேவையென்றால்கூட தனியாரிடம் கையேந்தி நிற்க வேண்டிய அவலநிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

ஏர் இந்தியாவை அடிமாட்டு விலைக்கு விற்றது மட்டுமல்லாமல் விமான நிலையங்களையும் அரசு விற்றுவிட்டது.

நாட்டில் தற்போது அரசு விமானங்களில் செல்லக்கூடிய வசதி படைத்தவர்கள் இருவர் மட்டுமே. ஒருவர் பிரதமர் மற்றொருவர் குடியரசுத் தலைவர். ஆனால் மக்களாகிய நாம் எல்லோரும் தனியார் விமானங்களையே நம்பி இருக்கிறோம்.

விமானக் கட்டணங்கள் சூதாட்ட விளையாட்டை போல் அன்றாடம் ஏறுவதை தடுத்து இரயில்வே பயணக் கட்டணங்களை போல் நிலையான விலையை அரசு நிர்ணயம் செய்ய வேண்டும்.

அதேபோல் வெளியில் 20 ரூபாய்க்கு விற்கப்படும் தண்ணீர்பாட்டில் விமான நிலையத்தினுள் 100 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வெளியில் 50 ரூ விற்கப்படும் இட்லி உள்ளே 300 ரூ விற்கப்படுகிறது. இதுபோன்ற காரணங்களால் சாமானிய மக்களுக்கு விமான பயணங்கள் அணுகக்கூடியதாக இல்லை என்பதை ஒன்றிய அரசு நினைவில் கொண்டு மாற்றத்தை கொண்டு வரவேண்டும்.

**தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களின் நிலை என்ன?**

**டி.பி.டி.மலையரசன்:**



தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட மற்றும் நிலுவையில் உள்ள தேசிய நெடுஞ்சாலை (NH) திட்டப்பணிகள் குறித்த விவரங்களை ஒவ்வொரு திட்டத்திற்கான மொத்த நீளம் மற்றும் செலவு உட்பட வெளியிட வேண்டும் என திமுகவின் கள்ளக்குறிச்சி தொகுதி எம்.பி டி. மலையரசன் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேபோல் அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு தமிழ்நாட்டில் செயல்படுத்தவிருக்கும் NH திட்டங்களின் விவரங்கள் மற்றும் அதற்கு ஒதுக்கப்பட்ட நிதியின் விவரங்களையும் கேட்டுள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலைகளின் கீழ் செல்லும் பல்வேறு நிலுவையில் உள்ள பாதாள சாக்கடை கட்டுமானங்களின் விவரங்களையும், அவற்றை முடிப்பதற்கு அரசு நிர்ணயித்திருக்கும் இலக்கு குறித்த விவரங்களையும் அரசு வெளியிட வேண்டும் என கேட்டுள்ளார்.

**பாசன நீர் வழங்கல் திட்டங்கள்**

**சிறுவேடல் க.செல்வம்**

**சி.என். அண்ணாதுரை**





பல்வேறு திட்டங்களின் கீழ் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் தற்போது நடைமுறையில் உள்ள நீர் வழங்கல் திட்டங்களின் எண்ணிக்கை விவரங்களை ஒன்றிய அரசு வெளியிட வேண்டும் என மக்களவையில் காஞ்சிபுரம் எம்.பி. க.செல்வம் மற்றும் திருவண்ணாமலை எம்.பி. சி.என். அண்ணாதுரை இணைந்து கூட்டு அறிக்கையில் கேட்டுள்ளனர்.

அதில் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது :

தற்போது நடைமுறையில் இருக்கும் நீர் வழங்கல் திட்டங்களை முடிக்க அரசு நிர்ணயித்திருக்கும் காலக்கெடு என்ன ?

கிராமப்புறங்களில் சரியான நேரத்தில் நீர் விநியோக திட்டங்களை முடிக்க அரசு எதிர்கொண்ட சவால்கள் என்ன?

நீர் வழங்கல் திட்டங்களை செயல்படுத்துவதில் ஒன்றிய அரசு தனியார் துறையை ஈடுபடுத்த முயற்சி செய்கிறதா? அப்படியென்றால் அதன் விவரங்களையும் அரசு வெளிப்படையாக அறிவிக்கவேண்டும்.

**அதிகபட்ச மின் தேவையை எப்படி சமாளிக்க போகிறது ஒன்றிய அரசு?**

**டி.எம்.செல்வகணபதி :**



திடீரென ஏற்படும் அதிகபட்ச மின் தேவை போன்ற சவால்களை எதிர்கொள்ள மேற்கொள்ளப்படும் ஆய்விற்காக மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒற்றைஉறுப்பினர் பெஞ்சை நியமித்தது மற்றும் அந்த ஆணையத்தின் ஆய்வறிக்கை தொடர்பான விவரங்களை வெளியிடுமாறு சேலம் மக்களவை தொகுதி உறுப்பினர் செல்வகணபதி இன்று கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது :

வரும்காலத்தில் உச்ச மின் தேவை 232.2 GW ஆக இருக்கும் என்கிற கணிப்பு உண்மையாக இருந்தால் அதை எதிர்கொள்ள ஒன்றிய அரசிடம் இருக்கும் திட்டங்கள் என்ன ?

சுமார் 12.60 GW (3% இருப்புத் தேவையுடன்) மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான வளங்களை கூடுதலாக தயாரித்து வைக்கவேண்டும் எனும் செய்தி உண்மையென்றால் அதற்கு அரசு எடுத்திருக்கும் நடவடிக்கைகள் என்ன ?

தேசிய, பிராந்திய, மாநில மின் பகிர்வு நிலையங்கள் கிரிட் விதிகளை பின்பற்ற எடுத்திருக்கும் நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை சமர்பிக்க வேண்டும் மேற்குறிப்பிட்ட ஆணையம் வலியுறுத்தியிருப்பதன் விவ ரங்களை வெளியிட வேண்டும்.

**தமிழ்நாட்டில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக போதிய நிதி ஒதுக்கப்படுகிறதா?**

**எம்.எம்.அப்துல்லா**



இந்திய தொல்லியல் துறையால் (ASI) கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட அகழாய்வு பணிகள் என்னென்ன? என்றும் அதற்காக போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? என்றும் திமுக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா மாநிலங்களவையில் கேள்விகளை எழுப்பினார்.

---

## மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் அளித்த

# கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலில் சேர்க்க வேண்டும்!

## மாநிலங்களவையில் – திருச்சி சிவா வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 7 -

மாநிலங்களவையில் கழகக் குழுவின் தலைவர் திருச்சி சிவா வலியுறுத்தி பேசியதாவது: -

கூட்டாட்சித் தத்துவத்தை நிலை நிறுத்த , உள்ளூர் தேவைகளை பூர்த்தி செய்ய, மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்க, கல்வியை மீண்டும் மாநில பட்டியலுக்கு திருப்பி கொடுக்க வலியுறுத்துகிறேன் என்று பாரம்பரியமாக மாநில பட்டியலில் இருந்த கல்வி 1976 அவசரநிலை காலகட்டத்தின் போது, மத்தியில் அதிகாரத்தை குவிக்கும் நோக்கில் பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. அவசரகதியில் எடுக்கப்பட்ட இந்த தேவையற்ற முடிவு கல்வியை இந்திய நிலப்பரப்புக்கு பெருமளவு பொருத்தமற்றதாக்கிவிட்டது .26 கோடி மாணவர்கள் கொண்ட, பரந்து பட்ட வேறுபாடுகள் கொண்ட இந்தியாவில், எழுத்தறிவு விகிதாச்சாரத்தில் பீகாருக்கும், தமிழ்நாடு மற்றும் கேரளாவுக்கும் மிகப்பெரிய இடைவெளி ஏற்பட்டு விட்டது. இது பிராந்திய அளவிலான கொள்கை உருவாக்கத்தின் அவசியத்தை நிரூபிக்கிறது.

ஒன்றியத்தால் வடிவமைக்கப்படும் கல்விக் கொள்கைகள் பிராந்திய நுட்பங்களை கவனத்தில் கொள்ளாமல் திறமை யின்மையை ஏற்படுத்தும். உதாரணமாக பழங்குடி மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட ஏகலைவா உண்டு உறைவிடப் பள்ளிக்கு பணி



நியமனம் செய்வதில் ஏற்பட்ட சவால்களே இதற்கு ஆதாரம். நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு பிராந்திய மொழிகளோடு ஏற்படும் பிரச்சனைகளால் தடை ஏற்பட்டு கற்பித்தலுக்கான தொடர்பு துண்டிக்கப்படுகிறது. கிராமப்புற மாணவர்களுக்கும், மாநில கல்வி திட்டத்தில் படித்த மாணவர்களுக்கும் நீட் தேர்வு ஒரு தடைக்கல்லாக இருப்பதால் தமிழ்நாடு அதைத் தொடர்ந்து எதிர்த்து வருகிறது.

மாநிலங்கள் தங்களுடைய தனித்துவமிக்க சமூக கலாச்சார நில பரப்புக்கு ஏற்ப கொள்கைகளை வடிவமைக்கின்றன. அதிகாரப் பரவலாக்கம் மாநிலங்களை நவீனமாக்கவும், பிராந்திய தேவைகளுக்கு பொருத்தமான கல்வி முறையையும் உறுதிப்படுத்தும். கல்வியை பொதுப்பட்டியலில் இருந்து மாநில பட்டியலுக்கு மீட்டெடுப்பது சுயாட்சி பெற்ற மாநிலங்கள் உருவாகவும், அவற்றிற்கு பொறுப்புணர்வை ஏற்படுத்தவும் வகை செய்யும். இந்தியா போன்ற பன்முகத் தன்மை கொண்ட நாடுகளில் பிராந்திய யுக்திகள் கற்றலின் விளைவை மேம்படுத்தும்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

## பிரதம மந்திரி கிசான் திட்டத்தில்

# தமிழ்நாட்டிற்கு நிதி உயர்த்தப்படுமா?

## மக்களவையில் ச.முரசொலி கேள்வி!

புதுடெல்லி, டிச. 7-

பிரதம மந்திரி கிசான் (PM Kisan) திட்டத்தின் கீழ் இதுவரை, 2019ல் அந்த திட்டம் தொடங்கப்பட்டது முதல், 340.86 கோடி ரூபாய் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என, ஒன்றிய அரசின் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலன் இணை அமைச்சர் ராமநாத் தாகூர் தெரிவித்து உள்ளார்.

இத்தகவலை தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி, பிரதம மந்திரி கிசான் சம்மன் நிதி மூலம் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு எவ்வளவு நிதி கொடுக்கப்பட்டுள்ளது, எவ்வளவு விவசாயிகள் பயனடைந்தார்கள் என்று எழுப்பிய கேள்விக்கு எழுத்து மூலம் பதிலாக மக்கள் அவையில் அளித்துள்ளார்.



இதன் மூலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் 1,27,796 விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இத்திட்டத்தின் மூலம் ஒரு ஆண்டிற்கு 6000 ரூபாய் 3 தவணைகளில் விவசாயிகளின் வங்கி கணக்குகளில், இடைத்தரகர்கள் இல்லாமல், டிஜிட்டல் முறையில் நேரடியாக செலுத்தப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

இதுவரை ஒன்றிய அரசு 3.46 லட்சம் கோடி ரூபாய் 18 தவணைகளில் இந்தியா முழுதும் செலுத்தியுள்ளது என்றும் அமைச்சர் தன் பதிலில் கூறியுள்ளார்.

முரசொலி அவர்கள் இந்த திட்டத்தில் நிதி உயர்த்தப்படுமா என்று கேட்டுள்ளதற்கு, தற்போது அத்தகைய திட்டம் எதுவும் இல்லை என்றும் பதில் அளித்துள்ளார்.

---

## மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட

# வேலை நாட்களின் எண்ணிக்கை 150 நாட்களாக உயர்த்தப்படுமா?

## மக்களவையில் - டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச.7-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் வேலை நாட்களின் எண்ணிக்கையை 100 நாட்களில் இருந்து 150 நாட்களாக அதிகரிக்கவும், ஒவ்வொரு ஆண்டும் ஆறு சதவீத ஊதிய உயர்வை நடைமுறைப்படுத்த ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா? என்று நாடாளுமன்ற மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவர் எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், ஸ்வச் பாரத், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனாகிராமப்புறம் மற்றும் கிராமப்புற மக்களின் குறிப்பாகப் பெண்களின் நலனைக் கருத்தில் கொண்டு பிற திட்டங்களுக்கான பட்ஜெட் ஒதுக்கீட்டை அதிகரிக்க ஒன்றிய அரசு போதுமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறதா? அதன் விவரங்கள்;

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் வேலை நாட்களின் எண்ணிக்கையை 100 நாட்களில் இருந்து 150 நாட்களாக அதிகரிக்கவும், ஒவ்வொரு ஆண்டும் ஆறு சதவீத ஊதிய உயர்வை நடைமுறைப்படுத்தவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?

எஸ்சி/எஸ்டி/ஓபிசி மற்றும் சிறுபான்மை சமூகத்தினருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தை ஒன்றிய அரசு தொடங்கியுள்ளதா? அதன் விவரம் யாவை?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தில் மாநில அமைச்சர் கமலேஷ் பாஸ்வான் எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:-

நீடித்த முயற்சிகள் மற்றும் வலுவான கொள்கை அமலாக்கம் மூலம் பெண்கள் உட்பட கிராமப்புற சமூகங்களின் நலன் மற்றும் மேம்பாட்டிற்கு இந்திய அரசு உறுதிபூண்டுள்ளது. 2022-23, 2023-24 மற்றும் 2024-2025 ஆகிய நிதியாண்டுகளுக்கான திட்ட வாரியான பட்ஜெட் மதிப்பீடுகளும், ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களைப் பொறுத்தமட்டில் திருத்தப்பட்ட மதிப்பீடுகளும் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

குடிநீர் மற்றும் சுகாதாரத் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் ஸ்வச் பாரத் மிஷன் (எஸ்பிஎம்) கீழ், திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத கிராமங்களைத் தக்க வைத்து மேம்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுகிறது.

குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு மேம்பட்ட சுகாதார விளைவுகளை உறுதி செய்வதற்கான விழிப்புணர்வு திட்டங்கள் ஸ்வச் பாரத் மிஷன் (SBM) கீழ் ஒதுக்கப்பட்ட ஒன்றிய அரசின் பங்கின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

2022-23ல் ரூ.5000.00 கோடி, 2023-24ல் ரூ.7000.00 கோடி, 2024-25ல் ரூ.7192.00 கோடி.

பெண்களின் நலனைப் பொறுத்தவரை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் (மகாத்மா காந்தி NREGA), 2005, பயனாளிகளில் பதிவு செய்து வேலை கோரியவர்கள் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு பெண்களாக இருக்க வேண்டும் என்று பெண்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், தனிப்பட்ட வேலையாக இருக்கும் பட்சத்தில், கிராமப்புற குடும்பத்தை தலைமை தாங்கும் பெண்கள் முன்னுரிமை அளிக்கப்படும் வகைகளில் ஒன்றாகும்.

கடந்த மூன்று நிதியாண்டுகளிலும் நடப்பு நிதியாண்டான 2024-25 (29.11.2024 நிலவரப்படி) மகாத்மா காந்தி NREGS இல் பெண்களின் பங்கேற்பு விகிதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:



2021-22ல் 54.82%, 2022-23ல் 57.47%, 2023-24ல் 58.90%, 2024-25ல் 57.75% (NREGASoft தரவின் படி)

(மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் (மகாத்மா காந்தி NREGS) ஒவ்வொரு நிதியாண்டிலும் குறைந்தபட்சம் நூறு நாட்களுக்கு உத்தரவாதமான தின ஊதிய வேலைவாய்ப்பை வழங்குகிறது. மேலும், வனப் பகுதியில் உள்ள ஒவ்வொரு பழங்குடியின குடும்பங்களுக்கும் கூடுதலாக 50 நாட்கள் ஊதிய வேலைவாய்ப்பை (100 நாட்களுக்கு அப்பால்) வழங்க அமைச்சகம் ஆணையிடுகிறது. இது தவிர, வறட்சி/இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட அறிவிக்கப்பட்ட கிராமப்புறங்களில் ஒரு நிதியாண்டில் கூடுதலாக 50 நாட்கள் வரை ஊதியம் வழங்குவதற்கான ஏற்பாடு உள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம், 2005 இன் பிரிவு 3 (4) இன் படி, மாநில அரசுகள் தங்கள் சொந்த நிதியிலிருந்து சட்டத்தின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட காலத்திற்கு அப்பால் கூடுதல் வேலை நாட்களை வழங்குவதற்கு வழிவகை செய்யலாம்.

ஊதிய விகித உயர்வு தொடர்பாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் (மகாத்மா காந்தி NREGA), 2005 இன் பிரிவு 6 (1) ன்படி, ஒன்றிய அரசு அதன் பயனாளிகளுக்கான வேலைக்கான ஊதிய விகிதத்தை அறிவிப்பின் மூலம் குறிப்பிடலாம். . அதன்படி, மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களுக்கு ஒவ்வொரு நிதியாண்டுக்கும் மகாத்மா காந்தி NREGA ஊதிய விகிதத்தை ஊரக வளர்ச்சி அமைச்சகம் அறிவிக்கிறது. மகாத்மா காந்தி NREGA தொழிலாளர்களுக்கு பணவீக்கத்தை ஈடுகட்ட, ஒவ்வொரு நிதியாண்டும் விவசாயத் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டில் (CPIAL) மாற்றத்தின் அடிப்படையில் ஊதிய விகிதத்தை ஊரக வளர்ச்சி அமைச்சகம் திருத்துகிறது.

2023-24 நிதியாண்டிலிருந்து 2024-25 நிதியாண்டுக்கான ஊதிய விகிதத்தில் ஒட்டுமொத்த % அதிகரிப்பு சுமார் 7% ஆகும்.

ஊரக வளர்ச்சி அமைச்சகத்தைப் பொறுத்த வரையில், குறைந்தபட்சம் நூறு நாட்களுக்கு உத்திரவாத ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் கூடிய ஊதிய வேலைவாய்ப்புத் திட்டமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை (மகாத்மா காந்தி NREGS) செயல்படுத்தி வருகிறது. சாதாரண வேலைகளைச் செய்ய முன்வந்த வயதுவந்த உறுப்பினர்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு நிதியாண்டிலும் வேலைவாய்ப்பு மற்றும் கடந்த மூன்று நிதியாண்டுகளிலும் நடப்பு நிதியாண்டான 2024-25 (29.11.2024 நிலவரப்படி) மகாத்மா காந்தி NREGSன் கீழ், பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்த பயனாளிகளின் பங்களிப்பு சராசரியாக 18-19% உள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.